# தனிப்பயிற்சி மையங்களை ஒழுங்குபடுத்துவது குறித்த வழிகாட்டுதல்கள்

**ஜனவரி 2024**

உயர்கல்வித் துறை, கல்வி அமைச்சகம்
இந்திய அரசு

## பின்னணி

1. தனியார் தனிப்பயிற்சி மையங்கள் (கோச்சிங் சென்டர்) தொடர்பான பிரச்சினைகளை அரசு தீவிரமாக கவனித்து வருகிறது. குறிப்பாக, இந்த மையங்களில் அதிகரித்து வரும் மாணவர் தற்கொலைகள், தீ விபத்துகள், அடிப்படை வசதிகளில் உள்ள குறைவுகள் ஆகியன குறித்தும் கற்பித்தல் முறைகள் குறித்தும் அரசு அக்கறை கொண்டுள்ளது.

2. போதுமான கொள்கைகளும் ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளும் இல்லாத நிலையில், நாட்டில் தனியார் தனிப்பயிற்சி மையங்களின் எண்ணிக்கை கட்டுப்பாடின்றி அதிகரித்து வருகிறது. அத்துடன், இம்மையங்கள் மாணவர்களிடம் அதிகக் கட்டணம் வசூலிப்பது, தேவையில்லாத மன உளைச்சலால் மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வது, தீ விபத்து போன்றவைகளால் விலைமதிப்பற்ற உயிர்கள் பலியாவது, இந்த மையங்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவது ஆகியன குறித்து ஊடகங்களும் பரவலாகச் செய்தி வெளியிடுகின்றன.

3. நாடாளுமன்றத்திலும் விவாதங்கள், கேள்விகள் போன்றவற்றில் இந்தப் பிரச்சினைகள் பல முறை எழுப்பப்பட்டுள்ளன.

4. +2 அளவில் கல்வியை ஒழுங்குபடுத்துவது மாநில / யூனியன் பிரதேச அரசுகளின் பொறுப்பு. எனவே, இந்த நிறுவனங்களையும் மாநில / யூனியன் பிரதேச அரசுகள் ஒழுங்குபடுத்துவதே சிறந்ததாக இருக்கும்.

5. இந்திய மாணவர் சங்கம், இந்திய அரசு (UOI) ஆகியவற்றுக்கிடையேயான பொது நல வழக்கு, 2013 (நீதிப்பேராணை 456) தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் கல்வி அமைச்சகமும் எதிர் மனுதாரராகச் சேர்க்கப்பட்டிருந்தது. மனுவில் எழுப்பப்பட்ட பிரச்சினை முக்கியமானது என்றாலும், அடிப்படையில் அது கொள்கை சார்ந்த விஷயமாகும். எனவே, மனுதாரர் இந்த விவகாரத்தைச் சட்டப்படி பரிசீலிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகலாம் எனக் கூறி 03.02.2017 தேதியிட்ட உத்தரவில் இந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

6. தனியார் தனிப்பயிற்சியை ஒழுங்குபடுத்துவது தொடர்பான பிரச்சினை நாடாளுமன்றத்திலும் அசோக் மிஷ்ரா குழு அறிக்கையிலும் விரிவாக விவாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, விதி மீறும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குமுறை விதிகளையும், கடுமையான தண்டனை வழங்கும் அமைப்பையும் உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை உயர்கல்வித் துறை கடிதம் (எண் 32-6/2017-TS I, தேதி 04.04.2017) வாயிலாக கேட்டுக் கொண்டது. இந்தக் கடிதத்தில், மாணவர் தற்கொலை தொடர்பாக நீதிபதி ரூபன்வால்

விசாரணை ஆணையம் பரிந்துரைத்த 12 நடவடிக்கைகளை மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் கருத்தில்கொள்ளுமாறு கோரப்பட்டது.

7. தனிப்பயிற்சி மையங்கள் பள்ளி அளவில் செயல்படுவதால் அவை மாநில / UT அரசுகளின் நேரடி வரம்புக்கு உட்பட்டவை. எனவே, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தங்கள் அதிகார வரம்பில் உள்ள தனிப்பயிற்சி மையங்களைத் தகுந்த சட்டக் கட்டமைப்பின் மூலம் ஒழுங்குபடுத்தத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு 14.08.2019ல் எழுதிய கடிதத்தில் (எண். 32-6/2017-TS.I) கோரப்பட்டது.

8. மீண்டும், 04.04.2017 மற்றும் 14.08.2019 தேதியிட்ட கடிதங்களை மேற்கோள் காட்டியபடி, 24.12.2020 தேதியிட்ட கடிதம் (எண். 32-18/2020-TS I) மூலம், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், முறையற்ற சுரண்டலைத் தவிர்க்கவும் இந்தப் பயிற்சி மையங்களைத் தகுந்த சட்டக் கட்டமைப்பின் மூலம் ஒழுங்குபடுத்துமாறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்குக் கோரிக்கை வைக்கப்பட்டது.

9. தொடர்புடையவர்களுடன் விரிவான ஆலோசனை நடத்திய பின்னர், ஜூலை 29, 2020 அன்று தேசியக் கல்விக் கொள்கை 2020 (National Education Policy 2020 - NEP 2020) அறிவிக்கப்பட்டது. **இன்றைய 'பயிற்சிக் கலாச்சாரத்தை' ஊக்குவிக்கும் தொகுநிலைக் கணிப்பீட்டை** (summative assessment) **விட, ஆக்கமுனைப்புக் கணிப்பீட்டில்** (formative assessment) **கவனம் செலுத்துவது** NEP 2020 இன் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும்.

10. தேசியக் கல்விக் கொள்கை 2020-ன் 4.36 பத்தியில், **பொதுத் தேர்வுகளும் நுழைவுத் தேர்வுகளும் உள்ளிட்ட இடைநிலைப் பள்ளித் தேர்வுகளின் தற்போதைய தன்மை, இதன் விளைவாக உருவாகியுள்ள இன்றைய பயிற்சி கலாச்சாரம், அதனால் விளையும் தீங்கு ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன**.

11. தேசியக் கல்விக் கொள்கை 2020இல் பத்தி. 4.37ல், **பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கான தேவையை ஒழிப்பதற்காக தற்போதுள்ள பொதுத் தேர்வு, நுழைவுத் தேர்வு முறைகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.**

12. பிற விஷயங்களுக்கு மத்தியில், பத்தி 4.38, **கூடுதல் நெகிழ்வுதன்மை, மாணர்வகளின் விருப்பத் தெரிவு, இரண்டு தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்றதை எடுத்து கொள்ளுதல், முக்கியத் திறன்களைப் பரிசோதிக்கும் அடிப்படைத் தேர்வுக் கணிப்பீடு, மனஅழுத்தத்தையும் தனிபயிற்சிக் கலாச்சாரத்தையும் குறைப்பதற்காகப் பொதுத் தேர்வுகளின் சிறந்த மாதிரியை உருவாக்குதல் ஆகியவற்றை**

**அறிமுகப்படுத்துவதைப் பரிந்துரைக்கிறது**.

13. NEP 2020 இன் பத்தி 4.42, '**பல்கலைக்கழக நுழைவு தேர்வுகளுக்கான நெறிகள் அதே மாதிரியாக இருக்கும். உயர்தரப் பொதுத் திறனாய்வுத் தேர்வையும், அறிவியல், வாழ்வியல் புலங்கள், மொழிகள், கலை, தொழிற்கல்விக்கான பாடங்களில் சிறப்புப் பொதுப் பாடத் தேர்வுகளையும் ஆண்டுக்கு குறைந்தது இரண்டு முறையாவது வழங்க தேசியத் தேர்வு முகமை (National Testing Agency - NTA) முயற்சிக்கும். இந்தத் தேர்வுகளில் கருத்தியல் புரிதல், அறிவைப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகியவை சோதிக்கப்படும். மேலும், இத்தேர்வுகளுக்கென சிறப்புப் பயிற்சி எடுக்க வேண்டிய தேவையை நீக்குவதை அவை நோக்கமாகக் கொண்டிருக்கும். மாணவர்களால் தேர்வெழுதுவதற்கான பாடங்களைத் தெரிவுசெய்ய முடியும். மேலும், ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட பாட விவரங்களைக் கண்டு, அதன்மூலம் அவர்களுடைய தனிப்பட்ட ஆர்வம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கான பாடப்பிரிவுகளில் சேர்க்க முடியும்.**

14. சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பில் தனிப்பயிற்சிக் கலாச்சாரத்தை ஒழிப்பதற்கான உத்தி தொடர்பான பிரச்சனை விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

15. பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (Common University Entrance Test - CUET), 13 மண்டல மொழிகளில் நுழைவுத் தேர்வு நடத்துதல், உயர் கல்வி நிறுவனங்களில் (Higher Education Institutions - HEI) சேர்க்கை எண்ணிக்கையைக் கணிசமாக விரிவுபடுத்துதல், கூடுதலான உயர்தர உயர்கல்வி நிறுவனங்களை அமைத்தல் போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க NEP 2020க்கு ஏற்ப அரசு முயற்சிகளை எடுத்துள்ளது. தேசியக் கலைத்திட்டக் வடிவமைப்பு (National Curriculum Framework - NCF) பள்ளிகளில் பாடத்திட்ட விஷயங்களிலும் பொதுத் தேர்வுகள் தொடர்பான விஷயங்களிலும் தற்போதைய விரும்பத்தகாத நிலைக்குக் காரணமானவைகளைத் தீர்க்க தெளிவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

16. மாணவர்கள் நீட் (UG) மற்றும் JEE (முதன்மை) நுழைவுத் தேர்வுகளுக்குச் சிறப்பாகப் பயிற்சி செய்ய உதவுவதற்காக, தேசியத் தேர்வு முகமை (NTA), விண்ணப்பதாரர்கள் ஆன்லைனில் உயர்தர மாதிரித் தேர்வுகளில் பங்குகொள்வதற்கு வசதியாக 'நேஷனல் டெஸ்ட் அபியாஸ்' என்ற இலவச மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

17. தவறான விளம்பரங்களை வெளியிடும் தனிப்பயிற்சி மையங்கள்/தனியார்

உயர்கல்வி நிறுவனங்கள் மீது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986ன் விதிகளின் கீழ் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்த விவகாரம் நுகர்வோர் விவகாரத் துறையிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

18. கல்வி பொதுப்பட்டியலில் உள்ளது, எனவே, மாநில, யூனிய பிரதேச அரசுகளும் இந்த விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

19. பல மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட தனியார் தனிப்பயிற்சி மற்றும் கல்வி வகுப்புகளை ஒழுங்குபடுத்துவதற்குப் பொருத்தமான சட்டக் கட்டமைப்பின் மூலம் முயற்சிகளை எடுத்துள்ளன. அவை: பீகார் தனிப்பயிற்சி நிறுவனம் (கட்டுப்பாடு & ஒழுங்குமுறை) சட்டம், 2010 [பீகார் சட்டம் 17, 2010], கோவா தனிப்பயிற்சி வகுப்புகள் (ஒழுங்குமுறை) சட்டம், 2001 (கோவா சட்டம் 27, 2001), உத்தரபிரதேச தனிப்பயிற்சி ஒழுங்குமுறை சட்டம், 2002 [UP சட்டம் எண். 5, 2002], கர்நாடக தனிப்பயிற்சி நிறுவனங்கள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள், 2001 [கர்நாடகா கல்விச் சட்டம், 1983 (கர்நாடகா சட்டம் 1, 1995) இன் பிரிவு 145ன் துணைப் பிரிவு (1) மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது], மணிப்பூர் தனிப்பயிற்சி நிறுவனம் (கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 2017 (சட்டம் எண். 2017) முதலியன. ராஜஸ்தான் தனிப்பயிற்சி நிறுவனங்கள் (கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறை) மசோதா, 2023 பொதுவெளியில் வைக்கப்பட்டுள்ளது, தனிப்பயிற்சி நிறுவனங்களில் பதிவுசெய்துள்ள மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் மனநலத்தை மேம்படுத்துவதற்கும் வழிகாட்டு நெறிமுறைகளை 27.09.2023 அன்று ராஜஸ்தான் அரசு வழங்கியுள்ளது.

20. தனியார் தனிப்பயிற்சி மையங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், ஒழுங்குபடுத்தப்படாத தனியார் தனிபயிற்சி மையங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இதனால், பொருத்தமான சட்டக் கட்டமைப்பின்கீழ் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் செயல்படுத்தக்கூடிய அளவிலான மாதிரி வழிகாட்டு நெறிமுறைகள்/கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

21. தனியார் தனிப்பயிற்சி மையங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கவும், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் ஏற்றுக்கொள்ளும் முறையான சட்ட கட்டமைப்பின் மூலம் மாதிரி வழிகாட்டு நெறிமுறைகள்/கொள்கைகளை உருவாக்கவும் மத்திய அரசு விழைகிறது.

## 1. தலைப்பு

தனிப்பயிற்சி மையங்களைப் பதிவுசெய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான வழிகாட்டுதல்கள் 2024.

## 2. வழிகாட்டுதல்களின் இலக்கு

வெவ்வேறு படிப்புகளுக்கும் போட்டித் தேர்வுகளுக்கும் மாணவர்களுக்குச் சிறப்பாக வழிகாட்டி உதவவும், கல்விசார் ஆதரவளிக்கவும் தனிப்பயிற்சி மையங்களை ஒழுங்குபடுத்துதல்.

## 3. வழிகாட்டுதல்கள் ஏன் தேவைப்படுகின்றன?

(i) தனிப்பயிற்சி மையங்களைப் பதிவுசெய்வதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு.

(ii) தனிப்பயிற்சி மையத்தை நடத்துவதற்குத் தேவையான குறைந்தபட்சத் தரநிலைகளைப் பரிந்துரைப்பதற்கு.

(iii) தனிப்பயிற்சி மையங்களில் சேரும் மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு.

(iv) பாடத்துணைச் செயல்களிலும் மாணவர்களின் முழுமையான மேம்பாட்டிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதை தனிப்பயிற்சி மையங்களுக்கு அறிவுறுத்துவதற்கு.

(v) மாணவர்கள் மன நலனைப் பேணுவதற்கென வேலைக்கு வழிகாட்டலையும் உளவியல்சார் ஆலோசனையும் வழங்குவதற்கு.

## 4. வரையறை

(i) 'மேல்முறையீட்டு அதிகாரி' என்பவர் உரிய அரசால் அறிவிக்கப்பட்ட அதிகாரி.

(ii) 'தனிப்பயிற்சி' என்பது **50க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு** பாடப்பிரிவு ஒன்றில் தனிக் கற்பிப்பு, போதனை, வழிகாட்டுதல் ஆகியவற்றை வழங்குவதாகும். ஆனால், இதில் ஆலோசனை, விளையாட்டு, நடனம், நாடகம், பிற படைப்பாக்கச் செயல்பாடுகள் ஆகியவை உள்ளடங்காது.

(iii) 'தனிப்பயிற்சி மையம்' என்பதில் குறிப்பிட்ட படிப்பு அல்லது போட்டித் தேர்வுக்குப் தனிப்பயிற்சி அளிக்கவோ, பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக அளவிலான மாணவர்களுக்கு கல்விசார் உதவியளிக்கவோ ஒரு தனிநபரால் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்பட்டு, நிர்வகிக்கப்படும் மையங்கள் அடங்கும். இதில் **50க்கும் மேற்பட்ட மாணவர்கள்** இருப்பார்கள்.

(iv) 'தகுதியுடைய அதிகாரி' என்பவர் உரிய அரசால் அறிவிக்கப்பட்ட அதிகாரி.

(v) ‘அரசு’ என்பது உரிய அதிகார வரம்பு கொண்ட மத்திய அரசு, மாநிலம் / யூனியன் பிரதேச அரசு.

(vi) ‘நிறுவனம்’ என்பது ஒரு குழுமத்துடன் இணைக்கப்பெற்ற, குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது மாநிலம் / யூனியன் பிரதேச அரசால் கட்டுப்படுத்தப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட பள்ளியாகவோ கல்வி நிறுவனமாகவோ இருக்கலாம். இந்த ‘நிறுவனம்’ இணைவுபெற்ற கல்லூரி, இணைந்த கல்லூரி, உறுப்புக் கல்லூரி, மத்திய அரசு அல்லது மாநிலம் / யூனியன் அரசுச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம், கல்வி நிறுவனம் ஆகியவையாகவும் இருக்கலாம்.

(vii) 'நபர்' என்பது தனிநபரைக் குறிக்கும். இதில் நபர்களின் குழு, கார்ப்பரேட் அமைப்பு, அறக்கட்டளை, தொழில் நிறுவனம், சமூகம், வேறு நிறுவனம் ஆகியவையும் அடங்கும்.

(viii) 'உரிமையாளர்' என்பதில் பதிவுசெய்ய விரும்பும் அல்லது பதிவு செய்துவிட்ட தனிப்பயிற்சி மையத்தின் உரிமையாளர், அத்துடன் கூட்டு உரிமையாளரும் அடங்குவர்.

(ix) 'பயிற்றுநர்' என்பவர் தனிப்பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டும், பயிற்சி அளிக்கும் நபர். இதில் சிறப்பு பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர்களும் அடங்குவர்.

(x) 'பல்கலைக்கழகம்' என்பது மத்தியச் சட்டம், மாகாணச் சட்டம், மாநிலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நிறுவப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தைக் குறிக்கும். பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டத்தின்கீழ் இதற்கென உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி குறிப்பிட்ட பல்கலைக்கழகத்துடன் கலந்தாலோசித்து பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்படும் அதுபோன்ற நிறுவனமும் இதில் அடங்கும்.

## 5. தனிப்பயிற்சி மையத்தின் பதிவு

(i) இந்த வழிகாட்டுதல்களின்படி தனிப்பயிற்சி மையத்தைப் பதிவுசெய்த பின்னரே, ஒரு நபர் பயிற்சியளிக்கவோ, மையத்தை நிறுவி, நடத்தி, நிர்வகிக்கவோ முடியும்.

(ii) இந்த வழிகாட்டுதல்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே அமைக்கப்பட்டுவிட்ட தனிப்பயிற்சி மையங்கள், இந்த வழிகாட்டுதல்கள் அமல்படுத்தப்படும் தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பதிவுசெய்ய விண்ணப்பிக்க வேண்டும்.

(iii) தனிப்பயிற்சி மையத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தை, அந்தத் தனிப்பயிற்சி மையம் அமைந்துள்ள உள்ளூர் அதிகார வரம்பிற்குள்ளான தகுதியுடைய அதிகாரியிடம் உரிய அரசால் குறிப்பிடப்படும் படிவத்தில், கட்டணங்கள், ஆவணங்களுடன் சமர்பிக்க வேண்டும்.

(iv) தனிப்பயிற்சி மையத்திற்கு பல கிளைகள் இருந்தால், ஒவ்வொரு கிளையையும் வெவ்வெறு தனிப்பயிற்சி மையமாகக் கருத வேண்டும், மேலும், ஒவ்வொரு கிளையையும் பதிவுசெய்வதற்கான தனி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(v) தனிப்பயிற்சி மையத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், உரிய படிவத்தில் பதிவுச் சான்றிதழை தகுதியுடைய அதிகாரி வழங்குவார், இல்லையெனில், மறுப்பதற்கான காரணங்களை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்து, அத்தகைய பதிவை வழங்க மறுக்கும் தனது உத்தரவை விண்ணப்பதாரருக்கு தெரிவிப்பார்.

ஆனால், பதிவுசெய்ய மறுக்கும் எந்தவொரு உத்தரவும், சம்பந்தப்பட்ட நபருக்குரிய விளக்கமளிக்கும் வாய்ப்பை வழங்கிய பின்னரே பிறப்பிக்கப்படும்.

(vi) செல்லுபடியாகும் காலத்தை ஏதேனும் காரணத்திற்காக முன்கூட்டியே ரத்து செய்யப்பட்டிருக்கவில்லையெனில், பதிவுச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் உரிய அரசால் தீர்மானிக்கப்படும்.

(vii) ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட தனிப்பயிற்சி மையமும், பதிவுச் சான்றிதழ் காலாவதியாகும் தேதிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர், உரிய அரசால் குறிப்பிடப்படும் படிவத்தில், கட்டணங்கள், ஆவணங்களுடன் பதிவுச் சான்றிதழைப் புதுப்பிக்க தகுதியுடைய அதிகாரியிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

(viii) பதிவு எண் புதுப்பிப்புக்கான விண்ணப்பத்தை, நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் பெற்று, நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்திய பிறகு, பதிவு எண் புதுப்பிப்புக்கான விண்ணப்பம் குறித்து, பதிவு காலம் முடிவடைவதற்கு முன்னர், சான்றிதழைப் புதுப்பிக்கலாம் அல்லது நிராகரிப்பதற்கான காரணங்களை எழுத்துப்பூர்வமாக பதிவுசெய்து, பதிவு காலம் முடிவடைவதற்கு முன்னர் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கலாம்.

ஆனால், பதிவுசெய்ய மறுக்கும் எந்தவொரு உத்தரவும், சம்பந்தப்பட்ட நபருக்குரிய விளக்கமளிக்கும் வாய்ப்பை வழங்கிய பின்னரே பிறப்பிக்கப்படும்.

(ix) மனிதர்கள் கூடுதலாக ஈடுபடத் தேவையின்றி, இணையவழியில் தனிப்பயிற்சி மையத்தைப் பதிவுசெய்வதற்கு வசதியாக வெப்-போர்டல் / ஆன்லைன் வழிமுறையை உரிய அரசு உருவாக்கும்.

## 6. பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்

(i) தனிப்பயிற்சி மையம் எதுவும் –

(அ) பட்டப்படிப்பைவிடக் குறைந்த தகுதிபெற்ற ஆசிரியர்களை

நியமிக்ககூடாது.

(ஆ) பெற்றோர்கள் / மாணவர்களைத் தனிப்பயிற்சி மையத்தில் சேரவைப்பதற்கென தவறான வாக்குறுதிகளை அளிப்பது அல்லது சிறந்த தரவரிசை அல்லது நல்ல மதிப்பெண்கள் பெறுவார் என உத்தரவாதம் அளிக்கக்கூடாது.

(இ) 16 வயதிற்குட்பட்ட மாணவர்களைச் சேர்க்கக் கூடாது அல்லது மாணவர் சேர்க்கை மேல்நிலைப் பள்ளி தேர்வுக்குப் பிறகு மட்டுமே இருக்க வேண்டும்.

(ஈ) நேரடியாகவோ மறைமுகமாகவோ, பயிற்சியின் தரம், அதில் வழங்கப்படும் வசதிகள், தனிப்பயிற்சி மையம் அல்லது அதன் வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவர் பெற்ற மதிப்பெண் ஆகியவை தொடர்பான தவறான விளம்பரம் எதையும் வெளியிடவோ, வெளியிட வைப்பவராகவோ, வெளியிடுவதில் பங்குபெறுவராகவோ இருக்கக் கூடாது.

(உ) ஒவ்வொரு மாணவருக்கும் தேவைபடும் குறைந்தபட்ச இட வசதி வழங்கமுடியாத நிலையில் பதிவுசெய்யப்படக் கூடாது.

(ஊ) ஒழுக்கமின்மை காரணமாக தண்டிக்கப்பட்ட நபர்களையும் பயிற்சியாளரையும் பணிக்கு அமர்த்தக் கூடாது.

(எ) இந்த வழிகாட்டுதல்களில் கூறப்பட்டுள்ளபடியான ஆலோசனை வழங்கும் அமைப்பைக் கொண்டிருக்காவிட்டால் பதிவுசெய்யப்படக் கூடாது.

(ii) பயிற்சியளிப்பவர்களின் தகுதி, படிப்புகள்/பாடத்திட்டம், முடிக்கும் காலம், விடுதி வசதிகள் இருப்பின் அவற்றின் விவரம், செலுத்த வேண்டிய கட்டணங்கள், எளிதாக வெளியேறும் கொள்கை, செலுத்திய கட்டணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கொள்கை, மையத்தில் பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை, உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதில் இறுதியாக வெற்றிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை போன்றவை பற்றிய சமீபத்திய விவரங்களுடன்கூடிய இணையதளத்தைத் தனிப்பயிற்சி மையம் வைத்திருக்க வேண்டும்.

(iii) தனிப்பயிற்சி மையம் உள்ளூர் அதிகார வரம்பில் பொருந்தக்கூடிய தனி பதிவு உட்பட பல்வேறு சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும்.

## 7. பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்

(i) தனிப்பயிற்சி மையத்தைப் பதிவு செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பத்தோடும் உரிமையாளரின் உறுதிமொழியும் சேர்க்கப்பட

வேண்டும். அதில் கூறப்பட வேண்டியவை –

(அ) "பதிவு செய்யப்பட்ட தனிப்பயிற்சி மையம்" என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்துவோம், மேலும், விளம்பரப் பலகை, தகவல் குறிப்பேடு, கடிதம் ஆகியவை எதிலும் எந்த விதத்திலும், இடத்திலும் "அங்கீகரிக்கப்பட்ட", "சான்றளிக்கப்பட்ட" ஆகிய சொற்களைப் பயன்படுத்தமாட்டோம்.

(ஆ) நிறுவனங்கள் / பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான தனிப்பயிற்சி வகுப்புகள் அந்த நிறுவனங்கள் / பள்ளிகள் நடைபெறும் நேரத்தில் நடத்த மாட்டோம்.

(இ) பயிற்சியளிப்பவர்களின் தகுதி, தனிப்பயிற்சி வகுப்பின் கால அட்டவணை, கட்டணம், பயிற்சி வகுப்பு குறித்த குறிப்பிடப்பட்டபடியான பொதுவான தகவல்கள் ஆகியவற்றை இணையதள வாயிலாகவும், தனிப்பயிற்சி மைய வளாகத்தில் உள்ள முக்கிய இடத்தில் அறிவிப்பு பலகை வாயிலாகவும் பார்வைக்கு வைப்போம்.

(ஈ) தனிப்பயிற்சி மையத்தில் பணிபுரியும் உரிமையாளர், பயிற்சியளிப்பவர், பணிபுரிவர்கள் எவரும் எவ்விதத்திலும் ஒழுக்கமின்மை தொடர்புடைய குற்றம் எதற்காகவும் தண்டிக்கப்படவில்லை, மேலும், பயிற்சியளிப்பவர் பணியிலமர்த்தப்பட்டுள்ளதில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால், அதை உடனடியாக உரிய அதிகாரியிடம் தெரிவிப்போம்.

(உ) தனிப்பயிற்சி வகுப்பில் அனுமதிக்கப்பட வேண்டிய மாணவர்களின் குறிப்பிட்ட எண்ணிக்கையைப் பற்றிய நிபந்தனையைக் கடைப்பிடிப்போம்.=

(ஊ) இந்த வழிகாட்டுதல்களின் பிற விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுவோம்.

(ii) பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்துடன் பட்டயக் கணக்காளரால் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கையின் நகல் இணைக்கப்பட வேண்டும்.

## 8. கட்டணம்

(i) பல்வேறு படிப்புகள் / கலைத்திட்டங்களுக்கான கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், சரியானதாகவும் இருக்க வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்டதற்கான ரசீதுகளை வழங்க வேண்டும்.

(ii) தனிப்பயிற்சி மையம், வெவ்வேறு படிப்புகள்/கலைத்திட்டம், பயிற்சி காலம், வகுப்புகளின் எண்ணிக்கை, விரிவுரைகள், பயிற்சிகள், விடுதி வசதிகள் (ஏதேனும் இருந்தால்), செலுத்தவேண்டிய கட்டணம், எளிதாக வெளியேறும் கொள்கை, கட்டணத்தைத் திரும்பப்பெறுதல் போன்றவற்றைக் குறிப்பிடும் தகவல் குறிப்பேட்டினை வெளியிட

வேண்டும். இந்த விவரங்களை கட்டிட வளாகத்தில் முக்கியமான, அணுகக்கூடிய இடத்திலும் பார்வைக்கு வைக்க வேண்டும்.

(iii) தகவல் குறிப்பேடு, குறிப்புகள், இதர கல்விசார் பொருட்கள் ஆகியவற்றைத் தனிப்பயிற்சி மையம் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு கட்டணங்கள் எதுவுமின்றி வழங்க வேண்டும்.

(iv) படிப்பிற்காக மாணவர் முழுமையாக கட்டணம் செலுத்திவிட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் நடுவில் படிப்பை விட்டு வெளியேறினால், மாணவருக்கு மீதமுள்ள காலத்திற்கான தொகை செலுத்திய கட்டணங்களில் இருந்து விகிதாச்சார அடிப்படையில் கணக்கிடப்பட்டு 10 நாட்களுக்குள் திருப்பித் தரப்படவேண்டும். தனிப்பயிற்சி மையத்தின் விடுதியில் மாணவர் தங்கியிருந்தால், விடுதி கட்டணம், உணவு விடுதி கட்டணம் போன்றவையும் திருப்பித் தரப்படும்.

(v) எக்காரணத்தைக் கொண்டும், குறிப்பிட்ட படிப்பு, குறிப்பிட்ட காலம் ஆகியவற்றுக்காகச் செலுத்தப்பட்ட கட்டணத்தை பயிற்சி காலத்தின்போது அதிகரிக்கக் கூடாது.

## 9. உள்கட்டமைப்பு தேவைகள்

(i) தனிப்பயிற்சி மையத்தின் அடிப்படைக் கட்டிட அமைப்பில், ஒரு வகுப்பு / குழுவில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் குறைந்தபட்சம் ஒரு சதுர மீட்டர் பரப்பளவு இடத்தை ஒதுக்க வேண்டும். சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கைக்குப் போதிய அளவிலான உள்கட்டமைப்பு இருக்க வேண்டும்.

(ii) தனிப்பயிற்சி மையக் கட்டிடம் தீ பாதுகாப்பு நெறிமுறைகள், கட்டிட பாதுகாப்பு நெறிமுறைகள், பிற தரநிலைகள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும், அரசால் நியமிக்கப்பட்ட தகுந்த அதிகாரிகளிடமிருந்து தீ மற்றும் கட்டிடப் பாதுகாப்பு சான்றிதழைப் பெற வேண்டும்.

(iii) மாணவர்களுக்கு உதவுவதற்கென, தனிப்பயிற்சி மையத்தில் முதலுதவிப் பெட்டி, மருத்துவ உதவி / சிகிச்சை வசதி ஆகியவை இருக்க வேண்டும். மருத்துவமனைகள், அவசர சேவைகளுக்கான மருத்துவர்கள், காவல்துறை உதவி எண் விவரங்கள், தீயணைப்பு சேவை உதவி எண், மகளிர் உதவி எண் போன்ற பரிந்துரை சேவைகளின் பட்டியலைப் பார்வைக்கு வைத்து, அவற்றைப் பற்றி மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(iv) தனிப்பயிற்சி மையக் கட்டிடம் முழுவதுமாக மின்மயமாக்கப்பட்டு, நல்ல காற்றோட்டத்துடன் இருக்க வேண்டும். மேலும், கட்டிடத்தின் ஒவ்வொரு வகுப்பறையிலும் போதிய விளக்குகளைப் பொருத்த வேண்டும்.

(v) மையத்தின் அனைத்து மாணவர்களுக்கும் பணியாளர்களுக்கும் பாதுகாப்பான, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழிவகைசெய்ய

வேண்டும்.

(vi) தனிப்பயிற்சி மையத்தில் தேவையான இடங்களில் கண்காணிப்பு (CCTV) கேமராக்களைப் பொருத்தி, பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

(vii) மாணவர்கள் புகார் தெரிவிக்க புகார் பெட்டி அல்லது பதிவேட்டைத் தனிப்பயிற்சி மையத்தில் வைக்க வேண்டும். மாணவர்களின் புகார்கள் / குறைகளைத் தீர்ப்பதற்கான குழுவை தனிப்பயிற்சி மையத்தில் அமைக்க வேண்டும்.

(viii) தனிப்பயிற்சி மையத்தின் கட்டிட வளாகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி கழிவறைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

## 10. கலைத்திட்டம்

### 10.1. வகுப்புகள்

(i) தகவல் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட நேரத்தில் வகுப்புகளை முடிக்க பயிற்சி மையம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

(ii) நிறுவனங்கள் / பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள், அந்த நிறுவனங்கள் / பள்ளிகளில் அவர்களுடைய தினசரி வருகையைப் பாதிக்காமல் இருக்கும் வகையில் அந்த நிறுவனங்கள் / பள்ளிகளின் நேரத்தில் நடத்தப்படக் கூடாது. இதன்மூலம் தனிப்பயிற்சி மையங்கள் போலிப் பள்ளிகளாக மாறுவதைத் தவிர்க்க முடியும்.

(iii) கல்விசார் உதவி கூடுதலாகத் தேவைப்படும் மாணவர்களுக்கு குறைதீர்க்கும் அல்லது உதவி வகுப்புகளை அளிக்கலாம்.

(iv) மாணவர்கள் ஓய்வெடுத்துப் புத்துணர்ச்சிபெறும் வகையில் கலைத்திட்டம் / வகுப்பின் கால அட்டவணை இருக்க வேண்டும். இதன்மூலம் மாணவர்மீது கூடுதல் அழுத்தம் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

(v) மாணவர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் வார விடுமுறையைத் தனிப்பயிற்சி மையங்கள் கட்டாயம் அளிக்க வேண்டும்.

(vi) வார விடுமுறைக்கு அடுத்த நாள் மதிப்பீட்டுத்-தேர்வு / பரீட்சை நடத்தக்கூடாது.

(vii) தங்களுடைய பகுதிகளில் நடைபெறும் முக்கியமான மற்றும் பிரபலமான திருவிழாக்களின்போது மாணவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் நேரம் செலவிட்டு உணர்வுரீதியாக உற்சாகம் பெறும் வகையில் விடுமுறைகளைத் தனிப்பயிற்சி மையம் அதற்கேற்றார்போல் வழங்க வேண்டும்.

(viii) தனிப்பயிற்சி மையங்கள் மாணவர்களுக்கு மிகையாகாத வகையில் தனிப்பயிற்சி வகுப்புகளை நடத்த வேண்டும். வகுப்புகள் ஒரு நாளில் 5

மணிநேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். தனிப்பயிற்சிக்கான நேரம் அதிகாலையிலோ மாலையில் வெகுநேரம் கழித்தோ இருக்கக் கூடாது.

(ix) தனிப்பயிற்சி மையங்கள் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கும், அறிதிறன்களை மேம்படுத்துவதற்கும் பாடத்துணைச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பயிற்சி மையங்கள், முக்கியப் பாடங்களைக் கற்பிக்கும் அதே வேளையில், ஆசிரியர், பணியாளர், மாணவர்கள் அனைவருக்கும் வாழ்க்கைத் திறன்கள், அறிவியல் மனப்பான்மை, சான்று அடிப்படையிலான சிந்தனை ஆகியவற்றின் மேம்பாடு, படைப்பாற்றலும் புதிது புனைதலும், உடற்பயிற்சி, நலவாழ்வு, பாசப்பிணைப்பும் மனநலமும், வயதுக்குத் தக்க சவால்கள், ஊக்கம், கூட்டுப்பணியும் குழுப்பணியும், சிக்கலைத் தீர்த்தலும் ஏரணரீதியாக விளக்கமறிதலும், அறஞ்சார் மற்றும் ஒழுக்கஞ்சார் விளக்கமறிதல், மனித மற்றும் அரசியலமைப்புசார் விழுமியங்கள் பற்றிய அறிவும் கடைப்பிடித்தலும், சுயப் பாதுகாப்பு (பாலினக் கூருணர்வும் பாலியல் தொல்லை தடுப்பும்), அடிப்படை கடமைகள்; குடியுரிமை திறன்களும் விழுமியங்களும், இந்தியா பற்றிய அறிவு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, துப்புரவும் உடல்நலமும் போன்றவை குறித்த ஆலோசனை அமர்வுகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

## 10.2. தனிப்பயிற்சி மையத்தின் நடத்தை விதிமுறை

(i) ஒவ்வொரு வகுப்பிலும் / குழுவிலும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தகவல் குறிப்பேட்டில் தெளிவாக வரையறுத்து இணையதளத்தில் வெளியிட வேண்டும், எக்காரணத்திற்காகவும் படிப்பின் இடையில் வகுப்பு / குழுவின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்கக்கூடாது.

(ii) ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர்-மாணவர் விகிதத்தைப் பராமரிப்பதற்கும், பயிற்சியாளர்களுடனும் ஆலோசகர்களுடனும் உறவை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உரிய அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும். வகுப்பில் பயிற்சியாளர்கள் கூறுவதை மாணவர்கள் எளிதில் பின்பற்றவும், திரை / கரும்பலகைகளை அவர்கள் எளிதாகப் பார்க்கவும் முடிய வேண்டும்.

(iii) தனிப்பயிற்சி மையத்தில் 16 வயதுக்குக் குறைந்த மாணவர்களைச் சேர்க்கக் கூடாது அல்லது இடைநிலைப் பள்ளி தேர்வுக்குப் பிறகு மட்டுமே மாணவர் சேர்க்கப்பட வேண்டும்.

(iv) பயிற்சித்திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு முன்னரே, தேர்வுகளின் சிரமம், பாடத்திட்டம், ஆயத்தமாக வேண்டிய நிலையின் அளவு, மாணவர்கள் எடுக்க வேண்டிய முயற்சிகள் ஆகியன குறித்த முழு விவரங்களையும் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

(v) கல்விச் சூழல், வாழ்க்கைப் பண்பாடு, உண்மை நிலை, பள்ளி அளவிலான தேர்வுகளுக்கும் போட்டித் தேர்வுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு

ஆகியன குறித்து மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

(vi) பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர்வது மட்டுமின்றி, பிற தொழில் வாய்ப்புகள் பற்றிய தகவல்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதனால், அவர்கள் தங்கள் எதிர்காலம் குறித்து மன அழுத்தமடையாமல், பிற வேலைகளுக்கான வாய்ப்பைத் தேர்வு செய்யலாம்.

(vii) மாணவர்களின் திறனை மதிப்பிடுவதற்கான நுழைவுத் தேர்வு அல்லது மாதிரித் தேர்வை நடத்தலாம். மாணவர்களின் திறன், ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில், யதார்த்தமாக மாணவர்களால் என்ன சாதிக்க முடியும் என்பதைப் பெற்றோருக்கு உணர்த்தி, மேற்படிப்புக்கான வழியைப் பரிந்துரைக்கலாம்.

(viii) மருத்துவம், பொறியியல், மேலாண்மை, சட்டம் ஆகியவற்றுக்கான கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கோ போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கோ பயிற்சி மையத்தில் சேருவது எந்த வகையிலும் உத்தரவாதம் அளிப்பதில்லை என்பதை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

(ix) மாணவர்களின் மனநலம் குறித்து மனநல நிபுணர்களுடன் இணைந்து அவ்வப்போது பயிற்சி வகுப்புகளையும், விழிப்புணர்வு அமர்வுகளையும் தனிப்பயிற்சி மையம் நடத்த வேண்டும்.

(x) தனிப்பயிற்சி மையம் மாணவர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் கற்பித்தல் முறை, பயிற்சிவகுப்பின் காலம், பயிற்சி மையத்தில் கிடைக்கும் வசதிகள் ஆகியன குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தேவையற்ற மன அழுத்தம், பிள்ளைகள் குறித்த எதிர்பார்ப்புகளின் சுமை ஆகியவற்றின் தீங்குகள் குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கவேண்டும்.

(xi) தனிப்பயிற்சி மையம் நடத்தும் மதிப்பீட்டுத் தேர்வின் முடிவைப் வெளியரங்கமாக அறிவிக்கக் கூடாது. மதிப்பீட்டுத் தேர்வை இரகசியமாக வைத்து, மாணவர்களின் செயல்திறனைப் பற்றிய வழக்கமான பகுப்பாய்வுக்காகப் அதைப் பயன்படுத்த வேண்டும். கல்விச் செயல்திறன் குறைவடைந்து வரும் மாணவருக்கு இந்த வழிகாட்டுதல்களில் கூறப்பட்டுள்ளபடி ஆலோசனை வழங்க வேண்டும்.

## 11. ஆலோசகர்கள் மற்றும் உளவியலாளர்கள் உதவி

(i) அதிகப் போட்டியும் கல்விசார் அழுத்தமும் மாணவர்கள் மீது இருப்பதால், மாணவர்களின் மனநலனுக்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தனிப்பயிற்சி மையங்கள் மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்காமல் வகுப்புகளை நடத்த வேண்டும். மேலும், வேதனை, மன அழுத்தத்தில் உள்ள மாணவர்களுக்கு நேரடியாகவும் தொடர்ச்சியாகவும் ஆதரவளிக்க உடனடியாக உதவும் வழிமுறைகளை

உருவாக்க வேண்டும்.

(ii) மாணவர்களும் பெற்றோர்களும் எளிதில் ஆலோசனை பெறுவதற்கான அமைப்பை தனிப்பயிற்சி மையம் உருவாக்குவதற்கு தகுதியுடைய அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும். உளவியலாளர்கள், ஆலோசகர்கள் ஆகியோரின் பெயர்கள், அவர்கள் சேவைகளை வழங்கும் நேரம் பற்றிய தகவல்கள் அனைத்தும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயனுள்ள வழிகாட்டலையும் ஆலோசனையையும் வழங்குவதற்காக பயிற்சி பெற்ற ஆலோசகர்களைத் தனிப்பயிற்சி மையத்தில் நியமிக்க வேண்டும்.

(iii) மன அழுத்தத்தையும் மனச்சோர்வையும் தீர்க்க மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும், உளவியல் சிகிச்சையளிக்கவும் ஆலோசகர்களையும் அனுபவம் வாய்ந்த உளவியலாளர்களையும் ஈடுபடுத்தப் பயிற்சி மையங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

(iv) மாணவரின் விருப்பம், இயல்திறம், திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கு வேலைக்கு வழிகாட்டும் ஆலோசகர்களைப் பயன்படுத்தலாம். இவற்றிற்குத் தகுந்த வேலைவாய்ப்பைத் தேர்ந்தெடுப்பதற்குரிய யதார்த்தமான புரிதலை மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் ஏற்படுத்த இந்த ஆலோசகர்கள் ஆலோசனை வழங்க முடியும்.

(v) மன ஆரோக்கியம், மன அழுத்தத்தைத் ஆகியவற்றைத் தடுப்பது குறித்து பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு தொடர்ச்சியாக பயிலரங்குகளையும் விழிப்புணர்வு வாரங்களையும் தனிப்பயிற்சி மையம் ஏற்பாடு செய்யலாம். உடல்நலம், நலமான ஊட்டச்சத்து, தனிநபர் மற்றும் பொதுச் சுகாதாரம், பேரிடர் மீட்புப்பணி, முதலுதவி, இவை மட்டுமின்றி, மது, புகையிலை, பிற போதைப்பொருள்கள் ஆகியவற்றின் தீங்கு விளைவிக்கும், பாதிப்பு விளைவிக்கும் பண்புகள் பற்றிய அறிவியல் விளக்கங்கள் ஆகியவற்றிலும் அது கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களின் மனநலம், மனவலிமை, பொறுப்பான சுய-கவனிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெற்றோருக்காக மையத்தால் ஏற்பாடு செய்யப்படும் கலந்துரையாடல் அமர்வில் பெற்றோரிடமிருந்து ஆக்கப்பூர்வமான கவனிப்பிற்கான தேவையும் வலியுறுத்தப்பட வேண்டும்.

(vi) மாணவர்களுடைய முன்னேற்றத்திற்கான பகுதிகளைப் பற்றிய தகவல்களை அவர்களிடன் திறம்படவும் நிதானிப்புடனும் தெரிவிப்பதற்கு பயிற்சியாளர்களும் மனநலச் சிக்கல்கள் குறித்த பயிற்சி பெறலாம்.

(vii) ஆலோசனையின் பகுதியாக தனிப்பயிற்சி மையம் ஒப்பார் குழு கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்ய வேண்டும். தனிப்பயிற்சி மையம் விவாதங்கள், போட்டிகள், திட்டங்கள் ஆகியவை மூலமான குழு அடிப்படையிலான பாடத்திட்டப் பயிற்சிகளை ஏற்பாடு செய்யலாம்.

(viii) வகுப்பில் பயிற்றுவித்த பயிற்சியாளர்களால் மாணவரின் சந்தேகங்கள் தீர்க்கப்படும். இதனால் மாணவர் மனநிறைவு அடைவார்.

(ix) தனிப்பயிற்சி மையம் பின்வருவனவற்றின்படி நிறுவனத்தில் மனநலத்தை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பைச் செயல்படுத்த வேண்டும்:

| **மன நலத்தை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பு** | | |
|---|---|---|
| **சிக்கல்கள் நிலை** | **பங்கேற்க வேண்டிய தொடர்புடையவர்கள்** | **செய்ய வேண்டிய நிலை** |
| மனநலம் | நிறுவனத்தைச் சேர்ந்த அனைவரும் | மனநலம் நிறுவனத்தின் கலைத்திட்டத்தோடு ஒன்றுசேர்க்கப்பட்டிருத்தல் |
| மனநல அறிவு, மனப்பான்மை, நடத்தை ஆகியவை | மாணவர்கள், பயிற்சியாளர்கள் அனைவரும் | மனநலம் – பொது உடல்நலக் கலைத்திட்டத்தின் பகுதியாக இருத்தல் |
| உளவியல் சிக்கல்கள் | ஆலோசகர்கள், பயிற்சியாளர்கள், ஒப்பார் வழிகாட்டிகள், விடுதிக் காப்பாளர்கள், குடிமக்கள் | தேவைப்படும் மாணவர்களுக்குக் கூடுதல் உதவி வழங்குதல் |
| தீவிரச் சிக்கல்கள்/ குறைபாடுகள் | ஆலோசகர்கள், நிறுவன மருத்துவர்கள், பிற வல்லுநர்கள் | தொழில்முறை மேலாண்மை |

## 12. அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் வசதிவாய்ப்புகள் வழங்குவதல்

(i) சேர்க்கையின்போதும் கற்பிக்கும்போதும் விண்ணப்பதாரர் / மாணவர் எவரிடமும் மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம், வம்சாவளி போன்றவற்றின் அடிப்படையில் தனிப்பயிற்சி மையம் பாகுபாடு காட்டக் கூடாது.

(ii) பெண் மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்புநிலைக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் அதிகளவில் சேருவதை ஊக்குவிக்க தனிப்பயிற்சி மையம் சிறப்பு வாய்ப்புகளை உருவாக்கலாம்.

(iii) தனிப்பயிற்சி மையக் கட்டிடமும் அதைச் சுற்றியுள்ள வளாகமும்

மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்றதாகவும், மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016ன் விதிமுறைகளுக்கு ஏற்பவும் இருக்க வேண்டும்.

(iv) கற்றல் குறைபாடுகள் குறித்து ஆசிரியர்கள் புரிந்துகொண்டு கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களை வசதியாக உணரச் செய்யலாம்.

(v) பிரெய்ல், இ-ரீடர்கள், கழிவறைகள் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை முடிந்தவரை கிடைக்கச் செய்யவேண்டும்.

(vi) குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் உதவி தேவைப்பட்டால் கூடுதல் உதவி வகுப்புகளை வழங்கலாம்.

(vii) கல்விச் செயல்திறன் அடிப்படையில் குழுப் பிரிக்கக் கூடாது. இது மாணவர்களின் மன நலத்தைப் பாதிக்கும் அளவுக்குக் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடும். மாணவர்களின் நுழைவு / சேர்க்கை வரிசையில் குழுக்களை உருவாக்க வேண்டும். பயிற்சி முடியும் வரை இக்குழுக்களை மாற்றக் கூடாது.

### 13. பதிவேடுகளைப் பராமரித்தல்

(i) உரிய அரசால் குறிப்பிடப்பட்ட பதிவுகள், கணக்குகள், பதிவேடுகள், பிற ஆவணங்கள் ஆகியவற்றைத் தனிப்பயிற்சி மையம் பராமரித்துச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) தனிப்பயிற்சி மையம் ஆண்டறிக்கையைப் பதிவுத்தொகுதிகளில் ஆவணப்படுத்த உரிய அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

### 14. தனிப்பயிற்சி மையத்தை இடம்மாற்றுவதற்கான கட்டுப்பாடு

தனிப்பயிற்சி மையம், பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே பயிற்சியை நடத்த வேண்டும். உரிய அதிகாரியிடமிடருந்து எழுத்துப்பூர்வ ஒப்புதல் கடிதம் இல்லாமல், பதிவுசெய்யப்பட்ட இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திற்கும் மாற்றக்கூடாது.

### 15. தனிப்பயிற்சி மையத்தின் செயல்பாடுகள் பற்றி அறிதல்

தகுதியுடைய அதிகாரி அல்லது உரிய அரசினால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி தனிப்பயிற்சி மையத்தின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் தனிப்பயிற்சி மையம் பதிவுசெய்ததற்கு தேவையான தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ளதா என்றும் மையத்தின் செயல்பாடுகள் திருப்தியளிக்கின்றனவா எனவும் விசாரிக்க வேண்டும்.

### 16. புகார்களை விசாரித்தல்

(i) தனிப்பயிற்சி மையங்களின் மீது மாணவர், பெற்றோர், தனிப்பயிற்சி மையத்தின் ஆசிரியர் / பணியாளர் ஆகியோரும், மாணவர்கள் / பெற்றோர்கமீது தனிப்பயிற்சி மையங்களும் உரிய அதிகாரியிடம் புகார் அளிக்கலாம். புகார்கள் முப்பது நாட்களுக்குள் உரிய அதிகாரியால்

அல்லது அரசால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவால் தீர்க்கப்படும்.

(ii) தகுதியுடைய அதிகாரி அல்லது விசாரணைக் குழுவின் அறிக்கையை விசாரிக்க வாய்ப்பளித்தபின், தகுதியுடைய அதிகாரி அபராதம் விதிக்க வேண்டும் அல்லது பதிவை ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 17. தண்டனைகள்

(1) தகுதியுடைய அதிகாரி சிவில் நீதிமன்றங்களுக்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பார். வழக்குகளைப் பரிசீலனை செய்வதற்கு, 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் (மத்தியச் சட்டம் எண்/5/1908) என்பதன்கீழ் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை இந்த அதிகாரி கொண்டிருப்பார், அதாவது:

(i) உறுதிமொழிப் பத்திர ஆதாரத்துடன் கூடிய சான்றுகளை ஏற்றுக்கொள்ளுதல்,

(ii) எந்த நபருக்கும் அழைப்பாணை விடுத்து, அவரது வருகையை கட்டாயப்படுத்துதல், உறுதிமொழி அடிப்படையில் விசாரித்தல்,

(iii) ஆவணங்களை கட்டாயமாக ஒப்படைக்கச் செய்தல்,

(iv) வழக்குக்கு ஆகும் செலவினை செலுத்தக் கட்டளையிடுதல், ஆகியன.

(2) பதிவுசெய்வதற்கான விதிமுறைகளும் நிபந்தனைகளும் அல்லது பொது நிபந்தனைகள் ஏதேனும் மீறப்பட்டால், தனிப்பயிற்சி மையம் பின்வரும் அபராதம் செலுத்த வேண்டும்:

(i) முதல் குற்றத்திற்கு ரூ. 25,000/-

(ii) இரண்டாவது குற்றத்திற்கு ரூ. 1,00,000/-

(iii) அடுத்தடுத்த குற்றத்திற்கு பதிவை ரத்துசெய்தல்

## 18. பதிவை ரத்துசெய்தல்

தனிப்பயிற்சி மையம் வழிகாட்டுதல்களின் விதிமுறைகளை மீறியுள்ளது அல்லது பதிவுசெய்வதற்கான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மீறியுள்ளது என்று சம்பந்தப்பட்ட தகுதியுடைய அதிகாரிக்கு தெளிவாகத் தெரிந்தால், தனிப்பயிற்சி மையத்திற்கு வழங்கப்பட்ட பதிவு சான்றிதழை எப்போது வேண்டுமானாலும் ரத்துசெய்யலாம். இந்த ரத்துசெய்யும் நடவடிக்கையானது தொடர்புடைய சட்டத்தை மீறியதற்காக எடுக்கப்படும் வேறு எந்த தண்டனை நடவடிக்கைக்கும் பாரபட்சம் இல்லாமல் இருக்க வேண்டும்.

பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவருக்கு முன்மொழியப்பட்ட உத்தரவை எதிர்த்து வாதிடுவதற்குப் போதிய வாய்ப்பை வழங்காமல், அத்தகைய உத்தரவைத் தகுதியுடைய அதிகாரி பிறப்பிக்கக் கூடாது.

## 19. மேல்முறையீட்டுக்கான நடைமுறை

தனிப்பயிற்சி மையத்தைப் பதிவுசெய்யவோ பதிவை புதுப்பிக்கவோ மறுக்கும் உத்தரவு, பதிவு ரத்துசெய்யப்படுதல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர்கள், அத்தகைய உத்தரவைப் பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு, உரிய அரசால் குறிப்பிடப்பட்ட முறையீட்டு அதிகாரியிடம் முறையீடு செய்யலாம்.